# சட்டப் பேரவையில் ஜெயலலிதா நடத்திய நாடகம்!

## திருநாவுக்கரசர் எம்.பி. அன்றே அம்பலப்படுத்தினார்!

**நாடாளுமன்ற மக்களவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது கனிமொழிகருணாநிதி மகாபாரததிரவுபதி குறித்து பேசியிருந்தார். இதற்கு பதில் அளித்து பேசிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தமிழ்நாடு சட்டமன்றத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவமரியாதை செய்யப்பட்டிருப்பதாக உண்மை நிலையை திரித்துக் கூறியிருந்தார்.**

**இந்நிலையில் உண்மைச் சம்பவம் குறித்து அன்று சட்டப்பேரவையில் நடந்த நிகழ்வு வருமாறு : –**

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியை கலைத்துவிட்டு, ஒன்றிணைந்த அ.தி.மு.க., இ.காங்கிரஸ் துணையோடு தேர்தலில் நின்றால் வெற்றி பெறலாம் என்ற ஆலோசனைகள் ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்டது. டெல்லியோடு ஆலோசனை நடத்தினார் ஜெயலலிதா. இப்போதுதான் தி.மு.க. ஆட்சி அமைந்துள்ளது. உடனடியாக கலைப்பது எல்லா மட்டத்திலும் அவப்பெயர் உருவாக்கும், ஏதாவது சட்டம் ஒழுங்கு பிரச்சினை உருவானால் ஆட்சியை கலைக்க இயலும் என டெல்லி வட்டாரம் தெரிவித்து விட்டது!

அப்போது, ஜெயலலிதாவுக்கும், அவரது ஆலோசகர்களுக்கும் மனதில் உதயமானது, சட்டமன்றத்தில் ஜெ.அணி, ஜானகி அணி இடையே நடந்த மோதலை காரணம் காட்டி சட்டமன்றத்தை கலைத்து ஆளுநர் ஆட்சி பிரகடனப்படுத்திய விவகாரம்தான்! அதே போன்று சட்டமன்றத்தில் குழப்பம் விளைவிக்க என்ன செய்யலாம் என்று திட்டமிடப்பட்டுள்ளது என்ற சேதி அன்றைய முதல்வர் கலைஞருக்கு எட்டியது!

1989 மார்ச் 25ந் தேதி, பட்ஜெட் உரையை முதல்வர் கலைஞர் நிகழ்த்தும் போது தாங்கள் போட்ட திட்டத்தை நிறைவேற்றிட முடிவெடுத்திருந்தனர். இதனை அறிந்த முதல்வர் கலைஞர், முதல் நாள் இரவே கழக சட்டமன்ற உறுப்பினர்களை, மறுநாள் அவையில் ஜெயலலிதா கட்சியினர் எந்த நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அமைதி காத்திட வேண்டும். யாரும் எந்தவித எதிர்வினையும் ஆற்றிடக் கூடாது என அமைச்சர்கள் மூலம் எச்சரித்திருந்தார்!

“மார்ச் 25, 1989 அன்று காலை 9 மணிக்கே கிட்டதட்ட 500 அ.தி.மு.க. தொ(கு)ண்டர்கள் கோட்டை வளாகத்தில் திட்டு திட்டாய் காணப்பட்டனர். தி.மு.க. வினர் 200 பேர் 11 மாடிக் கட்டிடத்தின் கீழே இருந்தனர். வெ.கிருஷ்ணமூர்த்தி, மதுசூதனன் தலைமையில் நான்கு வேன்களிலும், இரண்டு கார்களிலும், நான்கு ஆட்டோக்களிலும்

> **“மூத்தத் தலைவர்களை எல்லாம் கேட்டீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் ”அவர்களைக் கேட்டால் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினாலே அவர்களை எல்லாம் டைனிங் ஹாலிலே உட்கார வைத்திருக்கிறேன் என்று சொன்னார். ”நான் முடியாது என்று சொன்ன உடனே சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து ”சரி, அவர் மாட்டேன் என்று சொல்லுகிறார். உங்களில் யாருக்கு வசதிப்படுகிறதோ அவர்கள் போய் பட்ஜெட் படிப்பதைப் பிடுங்கிக் கிழியுங்கள்” என்று சொல்லிவிட்டு மேலே போய்விட்டார்.**

மேலும் பல தொ(கு)ண்டர்கள் சரியாக 10 மணிக்கு கோட்டை வளாகத்தில் வந்திறங்கினர்

என மார்ச் 25 ஆம் தேதி சட்டமன்றத்தில் நடந்தது குறித்து எழுதிய ‘தராசு’, 7.4.89 தேதியிட்ட இதழ் குறிப்பிட்டிருந்தது இங்கு கவனிக்கத்தக்கது.

மொத்தத்தில், டெல்லியில் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு, ஆதரவாளர்களுடன் கூடி சட்டமன்றத்தில் குழப்பம் உருவாக்க முடிவெடுத்ததாக வந்த தகவல் சரியானதுதான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அ.தி.மு.க.வின் ஒவ்வொரு நடவடிக்கையும் அமைந்தது!

அவை கூடியதும் இ.காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தனும் ஜெயலலிதாவும் எழுந்து தாங்கள் தந்த உரிமை மீறல் பிரச்சினைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டனர். “முதல்வரும் அமைச்சரவையும் பதவி விலக வேண்டும் என்பதற்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருகிறேன்” என்று ஜெயலலிதா கூறினார். அப்போது முன்னாள் சபாநாயகராக இருந்த பாண்டியன் எழுந்து அவை விதிகளைப் பற்றி கூறி ஜெயலலிதாவின் நடவடிக்கை தவறானது எனக் கூற, சிறிது நேரம் அவையில் பரபரப்பு நிலவியது. தி.மு.கழக உறுப்பினர்கள் எல்லோரும் அமைதியாக அமர்ந்திருந்தனர். சபாநாயகர், பாண்டியனை உட்காருமாறு கூறி விட்டு, குமரி அனந்தனும், ஜெயலலிதாவும் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினை குறித்து திங்கட்கிழமை தீர்ப்பு அளிப்பதாக கூறிவிட்டு, முதல்வரை பட்ஜெட் உரையை படிக்குமாறு கூறினார்.

உடனே முதல்வர் கலைஞர் எழுந்து ‘பட்ஜெட்’ உரையை படிக்கத் துவங்கினார்.

ஜெயலலிதா எழுந்து ‘கிரிமினல் முதல்வர் பட்ஜெட் படிக்கக் கூடாது, என்றும் You Criminal, don't Read என ஆங்கிலத்தில் சத்தமிட்டார். உடனே அருகிலிருந்த அ.தி.மு.க.வினர் பட்ஜெட் உரையை கலைஞர் கையிலிருந்து பிடுங்கினர். ஜெயலலிதா, கலைஞர் முகத்தினை நோக்கி கையை உயர்த்திட கலைஞர் கண்ணாடி கீழே விழுந்தது. அ.தி.மு.க. உறுப்பினர்கள் கலைஞரை தாக்கும் நோக்கில் முன்னால் ஓடி வர, கழக அமைச்சர்கள் அவர்களை பிடித்துத் தள்ளி கலைஞரை பாதுகாத்தனர்.



அதைத்தவிர ஜெயலலிதா எதிர்பார்த்து வந்தபடி எந்தவித எதிர்வினையும் ஆற்றாது தி.மு.க. உறுப்பினர்கள் கலைஞர் ஆணையை ஏற்று அமைதியாக இருந்து விட்டதால் ஜெயலலிதா போட்டு வந்த திட்டம் எதுவும் நிறைவேறவில்லை. உடனே அவரே தலையை கலைத்துக் கொண்டு, சேலையில் ஒரு பகுதியை கிழித்து விட்டுக் கொண்டு தன்னை தி.மு.க.வினர் தாக்கி விட்டது போல கூச்சலிட்டுக் கொண்டு வெளியேறினார்.

இந்தச் சம்பவம் எப்படி திட்டமிடப்பட்டது என்று பின்னர் அ.தி.மு.க.விலிருந்து விலகிய திருநாவுக்கரசே சட்டமன்றத்தில் விளக்கினார்!

அ.தி.மு.க.விலே ஜெயலலிதாவிற்கு ஆதரவாக இருந்த திருநாவுக்கரசு அவர்கள் அந்தச் சம்பவம் நடைபெற்ற ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு அதே சட்டப் பேரவையில் விளக்கமளித்தார். நீண்ட விளக்கம்தான். ஆனால் பதிவு செய்யவேண்டிய விளக்கம். அதனால் அந்த விளக்கம் முழுவதையும் படியுங்கள். அன்று எப்படிப்பட்ட அரசியல் நாடகங்கள் தி.மு.க.விற்கு எதிராக நடத்தப்பட்டன என்பது விளங்கும்.

**அன்று நடைபெற்ற சம்பவத்தின் உண்மை நிலையை விளக்கி சட்டமன்றத்தில் திருநாவுக்கரசர் பேசினார். அவரது பேச்சின் ஒரு பகுதி வருமாறு: –**

**”இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பட்ஜெட்டைப் படித்தபோது சட்டமன்றத்திலே ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது. அனைவருக்கும் தெரியும். இப்போது நான் சொல்வது; என்னுடைய தாய் மீது ஆணையாக நான் தெய்வமாக வணங்குகிற எம்.ஜி.ஆர். அவர்கள் மீது சத்தியமாக சொல்வதாகும்.**

**முதல் பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்தபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அவரது வீட்டில் உட்கார வைத்துக் கொண்டு என்னைப் பார்த்து ”நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர் பட்ஜெட் படிக்கும்போது நான் பிடித்து இழுத்தால் நன்றாக இருக்காது. எனவே என் பக்கத்திலே இருக்கிற நீங்கள் முதலமைச்சர் கருணாநிதியின் கையிலே இருக்கிற பட்ஜெட் காப்பியை பிடித்திழுத்து அடிக்க வேண்டும் என்று சொன்னார். நான் உடனே மிகுந்த வேதனையோடு சொன்னேன். ”தெரிந்தோ தெரியாமலோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களைப் பத்தாண்டு காலம் கௌரவமிக்க பதவிகளில் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். தயவு செய்து அடியாட்களாக எங்களை மாற்றாதீர்கள். அதற்கு என்னுடைய மனச்சாட்சி இடம் தரவில்லை.**

**இரண்டாவது, இதுபோன்ற சம்பவம் வேண்டாம் என்று நான் வாதாடியதுடன்;”முதல் அமைச்சர் நமக்குப் பிடிக்காதவராகக்கூட இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அவருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற பெரும் பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர் மீது கை வைக்கிறபோது அவர்கள் உணர்ச்சி வசப்படு வார்கள். அங்கு நிச்சயமாக அடிதடி நடக்கும். ரகளை நடக்கும்.**

**புரட்சித் தலைவர் இருக்கும் போது எவ்வளவோ பிரச்சினைகள் நடந்திருக்கின்றன. அவருக்குப் பக்கத்தில் யாராவது போனால் கூட நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தாக்கியிருப்போம். அதுபோல இன்றைய முதல மைச்சருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாகத் தாக்குவார்கள். அசம்பாவிதம் நடக்கும். அசிங்கமாகப் போய்விடும். பத்திரிகைகளிலே எல்லாம் கேவலமாக எழுதுவார்கள் என்று வாதாடினேன்.**

**”மூத்தத் தலைவர்களை எல்லாம் கேட்டீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் ”அவர்களைக் கேட்டால் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினாலே அவர்களை எல்லாம் டைனிங் ஹாலிலே உட்கார வைத்திருக்கிறேன்” என்று சொன்னார். ”நான் முடியாது என்று சொன்ன உடனே சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து “சரி, அவர் மாட்டேன் என்று சொல்லுகிறார். உங்களில் யாருக்கு வசதிப்படுகிறதோ அவர்கள் போய் பட்ஜெட் படிப்பதைப் பிடுங்கிக் கிழியுங்கள்” என்று சொல்லிவிட்டு மேலே போய்விட்டார்.**

**டைனிங் ஹாலுக்கு உள்ளே டாக்டர் ஹண்டே, திரு.ராகவானந்தம், திரு.மாதவன், திரு. எஸ்.டி.எஸ். மற்றும் அப்போதிருந்த மூத்தத் தலைவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நான் அங்கே போய், “யார் இந்த ஆலோசனையைச் சொன்னது” என்று அவர்களிடத்திலே சண்டை போட்டேன்.**

**செல்வி ஜெயலலிதா மாடியிலிருந்து இறங்கி வந்தார். வந்தவுடனே, அங்கே இருந்தவர்களைப் பார்த்து, “புறப்படலாம், நேரம் ஆச்சு என்றார். மூத்தத் தலைவர்கள் யாருக்கும் அவர் வந்த வேகத்திலே தடுத்துச் சொல்ல துணிச்சல் இல்லை. அவரை அழைத்துச் சென்று சட்டமன்ற அவையிலே உட்கார வைத்து விட்டு, “தோழமைக் கட்சி, காங்கிரஸ் கட்சியிடத்திலே**



**இதுபற்றி கேட்டீர்களா? என்றேன். அவர், “எல்லோரையும் கலந்துதான் சொல்லுகிறேன். இன்றைக்குச் சட்டமன்றத்திலே வன்முறை நடந்தால் இன்றைக்கு மாலையே ஆட்சி கலைக்கப்படும் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது என்று சொன்னார்.**

**நான் உடனே தோழமைக்கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் அறைக்குச் சென்று ”இன்றைக்கு நாங்கள் எல்லாம் வெளிநடப்பு செய்வதாக இருக்கிறோம். நீங்களும் எங்களோடு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்றும், அத்துடன், “இன்றைக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் நீங்களும் உள்ளேயிருந்து ஏதாவது உதவி செய்வீர்களா? என்றும் மறைமுகமாகக் கேட்டேன்.**

**நேரிடையாகச் சொல்லாமல் அவர் “நான் புறப்படுவதற்கு முன்னாலேயே பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் 8.30 மணிக்கு பேசி விட்டுத்தான் வந்தேன். அதற்கு காவல் துறையின் மீது ஒரு கண்டன அறிக்கையைப் படித்துவிட்டு எங்களுடைய காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு செய்யப் போகிறது. இதுதான் எங்களுக்கு டெல்லியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற உத்தரவு என்று சொன்னார்.**

**செல்வி ஜெயலலிதா அவையில் உட்கார்ந்திருந்தார். நான் வேகமாக வந்து, “திரு. மூப்பனார் அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் எந்த விதமான அசம்பாவிதமும் இங்கே நிகழ்த்துவதற்குத் தயாராக இல்லை. காங்கிரஸ்காரர்கள் வெளிநடப்பு செய்யப் போகிறார்கள் என்று சொன்னேன். “மூப்பனார் எப்போதும் இப்படித்தான் எனக்கு விரோதமாகத்தான் அவர் சொல்லுவார். எனக்கு வேறு மாதிரித் தகவல் வந்திருக்கிறது என்று கூறியதுடன் “நீங்கள் போய் ஏன் அவரிடத்தில் கன்சல்ட் செய்தீர்கள்? என்றார்.**

**அதன்பிறகு அன்றைக்கு இங்கு சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். வன்முறையைத் தொடர்ந்து சட்டமன்றத்திற்குள்ளே அடிதடி ரகளை எல்லாம் நடந்தது. பிறகு செல்வி ஜெயலலிதா அவர்களை அழைத்துக் கொண்டு வண்டியிலே நானும் திரு.கே.கே.எஸ்.எஸ். ஆரும் முன்னாலேயும் பின்னாலேயும் அமர்ந்து கொண்டு போகிறோம். வீடு போகிறவரை, “இன்றைக்கு மாலையே ஆட்சியை கலைக்கப் போகிறார்கள். ஆட்சியைக் கலைக்கப் போகிறார்கள் என்று சொல்லிக் கொண்டே வந்தார்.**

இவ்வாறு சு.திருநாவுக்கரசர் எம்.பி. கூறியுள்ளார்.




### ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டின்

## புகைப்பட நிபுணர் அம்பலப்படுத்தும் உண்மைகள்!

இந்த சம்பவத்தின்போது, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏடு தனது புகைப்பட நிபுணரை ஜெயலலிதா வீட்டுக்கு ஜெயலலிதாவை புகைப்படம் எடுத்துவர அனுப்பியது. இந்த நிகழ்வை பல ஆண்டுகளுக்குப் பின் நினைவுகூர்ந்து அந்த ஏட்டின் புகைப்பட நிபுணர் சிவராமன் ஒரு பேட்டி அளித்திருந்தார்.

அந்தப் பேட்டி அளித்தபோது அவர் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ புகைப்படக்காரர் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார். அவர் பேட்டியில் ஜெயலலிதா வீட்டிற்குச் சென்று பிரத்யேகமாக அவரை படம் எடுத்ததை விவரித்திருந்தார். அந்தப் பேட்டியை கூர்ந்து கவனித்தால் அது பல உண்மைகளை வெளிக் கொணரும்.

**அவரது பேட்டியைப் படியுங்கள்:**

**“நான் அப்போது மிகவும் இளைஞன். நான் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் இல்லத்துக்கு மிக தாமதமாகவே சென்றேன். நான் போவதற்கு முன்பு அங்கிருந்த புகைப்படக்காரர்கள் எல்லாம் சென்று விட்டிருந்தனர்” என பேட்டியைத் துவங்குகிறார் சிவராமன். பின்னர் அங்கிருந்த ஒருவரை அழைத்து, தான் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டிலிருந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். அவரை சிறிது நேரம் காத்திருக்குமாறு கூறியுள்ளார். அவரும் காத்திருந்திருக்கிறார். அதன் பின்னர் ஜெயலலிதா, வீட்டினுள் இருந்து வந்திருக்கிறார்.**

**அதே கிழிசலுடன் கூடிய புடவை, கலைந்த முடியுடன் வெளியே வந்த ஜெயலலிதா, ‘பாருங்கள் எத்தனை அட்டூழியத்தை அவர்கள் செய்துள்ளனர்’ எனக் கூறிட, புகைப்படக்காரரும், அவரைப் பல கோணங்களில் புகைப்படம் எடுத்து, கருப்புப் புடவையின் கிழிந்த ஓட்டை வழியாக அவர் பார்ப்பது போல ஒரு புகைப்படம் எடுத்துக் கொண்டு, தான் அலுவலகம் சென்றுள்ளதாக பேட்டியில் அந்தப் புகைப்பட நிபுணர் தெரிவித்துள்ளார்.**

மறுநாள் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டின் முதல் பக்கத்தில், மக்களின் அனுதாபத்தை ஜெயலலிதா பெற்றிடும் வகையில் அந்தப் படம் பிரசுரிக்கப்பட்டது!

இந்தக் கூத்தெல்லாம் எவ்வளவு பெரிய திட்டமிட்டு, ஏடுகள் சில ஜெயலலிதாவை பதவியில் ஏற்றபாடுபட்டுள்ளன என்பதை விளக்கும்.

### திரையை விட

## அரசியலில் சிறப்பாக நடித்த ஜெயலலிதா!

ஏறத்தாழ 13 ஆண்டு காலம் ஆதிக்க சக்திகள், அவர்களது பிடியிலிருந்த ஏடுகள் துணையோடு, நடந்த ஒரு கோமாளித்தனமான, லஞ்சலாவண்ய மக்கள் விரோத கொடுங்கோல் ஆட்சியை அயராது எதிர்த்துப் போராடி அதற்காக களங்கள் பல அமைத்து தியாகங்கள் பல செய்து, அமைத்த ஆட்சியை கவிழ்த்திட மீண்டும் எப்படிப்பட்ட சூழ்ச்சிகள் செயல்படுத்தப்பட்டன என்பதை திருநாவுக்கரசர் விலாவாரியாக உள்ளத்தில் எந்தவித ஒளிவு மறைவின்றி, சட்டமன்றத்திலேயே எடுத்துரைத்தார்!

ஆனால், அந்த சம்பவம் சட்டமன்றத்தில் நடந்தபோது, அது அரங்கேற்றப்பட்ட நாடகம் என்பதற்கு ஆதாரங்கள் பல இருந்தும் அவற்றை எல்லாம் மறைத்து, ‘ஜெயலலிதா சட்டமன்றத்தில் தாக்கப்பட்டார்’ என அவர் தலைவிரிகோலமாக புகைப்படத்துக்குத் தந்த ‘போஸ்’களை ஏடுகளில் வெளியிட்டு, அராஜகத்தை கட்டவிழ்த்தவர்கள் யார் என்பதை வெளியுலகுக்கு காட்டாது, தி.மு.க.தான் ஜெயலலிதாவை தாக்கியது போல செய்திகளை மிக சாதுர்யமாக உருவாக்கி வெளியிட்டன!

**“ஜெயலலிதா திட்டமிட்டு அமளியை உருவாக்கினார்!”.**

**“மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியை கவிழ்க்க திட்டமிட்ட சதி”.**

**“சட்டமன்றத்தில் நடைபெற்றது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட நாடகம்!”**


**“சட்டசபையில் கலவரம் நடத்தி ஆட்சியை கவிழ்க்கும் முயற்சி”.**

**“மத்தியஅரசோடு சேர்ந்து ஜெயலலிதா தீட்டிய திட்டத்தை தி.மு.க. முறியடித்தது”**

இதுபோன்ற தலைப்புகளையோ, செய்திகளையோ, ஜனநாயகத்தின் தூண் களில் ஒன்றாகக் கருதப்படும் ஏடுகள்; குறிப்பாக தமிழக நாளேடுகள் எதுவும் வெளியிடவில்லை.

தி.மு.க. மீண்டும் பதவிக்கு வந்ததை ஜீரணிக்க இயலாத ஏடுகள் சில ஜெயலலிதா மீது மக்களுக்கு அனுதாபம் ஏற்படும் வகையில் படங்களையும், செய்திகளையும் வெளியிட்டன. திரையில் காட்டியதைவிட, அரசியலில் தனது நடிப்பாற்றலை சிறப்பாகக் காட்டினார் ஜெயலலிதா!

## மருத்துவமனையில் நாடகம்!



‘ஜெயலலிதாவுக்குப் பூச்செண்டும், தி.மு.க. ஆட்சிக்குப் பூச்சாண்டியும் காட்டிச் சென்ற’ அன்றைய மத்திய அமைச்சர் தினேஷ் சிங்.

திட்டமிட்டு டெல்லியிடம் அனுமதியும் பெற்று ஜெயலலிதா நடத்திய நாடகம், அன்றைய முதல்வர் கலைஞரின் சாதுர்யத்தால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் முற்றாக நடைபெறாது முனை முறிக்கப்பட்டு விட்டது.

‘தான் தாக்கப்பட்ட செய்தி காட்டுத் தீயாக பரவும், நாடெங்கும் கொதிப்பு உருவாகும், மாலையே தி.மு.க. ஆட்சி கவிழும்’ என்ற கனவுகளோடு சாலையில் காரில் ஏறி புறப்பட்ட ஜெயலலிதாவுக்கு அப்படி எந்தப் பிரளயமும் ஏற்படாதது அதிர்ச்சியானது!

மக்கள் அனுதாபத்தை சம்பாதிக்க தனக்கு வேண்டிய மருத்துவமனை ஒன்றில் போய் சேர்ந்து, மண்டையில் கட்டு ஒன்றை போட்டுக் கொண்டு ஓரிருநாள் நாடகமாடினார்! எம்.ஜி.ஆரின் சொத்தை மீட்டுக் கொண்டு அரசியலுக்கு விடை கொடுத்து விட்டு, தான் தலைவராக இருந்த கட்சியையும், ஜெயலலிதாவிடம் தந்துவிட்ட ஜானகி அம்மையாரும் இ.காங் கிரஸ் தலைவர்களும், ஜெயலலிதாவை மருத்துவமனையில் சந்தித்தனர். அது சிலநாள் செய்தியானது. ஏடுகள் நித்தம் அந்தச் செய்திகளை வெளியிட்டு அனுதாபத்தை காட்டிடும் முயற்சிகளில் ஈடுபட்டன.

# கீழ்த்தரமான செயலில் ஈடுபட்ட ஜெயலலிதா!


## ஜனநாயக மாதர் சங்கக் கூட்டத்தில் பாப்பா உமாநாத் பேச்சு !

பெண்களிடம் அனுதாபத்தை உருவாக்கும் வகையில், அவையில் அப்போது அமைச்சராக இருந்த துரைமுருகன் ஜெயலலிதாவின் புடவையைப் பிடித்து இழுத்ததாக ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தி பரப்பப்பட்டது!

அந்த காலகட்டத்தில் அவையில் உறுப்பினராக இருந்த மார்க்சிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் பாப்பா உமாநாத், “துரைமுருகன் ஜெயலலிதாவின் புடவையை இழுத்தார் என்று பத்திரிகைகளில் பரப்பப்படும் செய்தி முற்றிலும் தவறானது என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து ஜனநாயக மாதர் சங்கக் கூட்டத்திலேயே பாப்பா உமாநாத் பேசினார்.

“சட்டசபையில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். சில பத்திரிகைகள் தவறான செய்திகளை போட்டு இருக்கின்றன. நான் சட்டசபையில் இருந்து நேரில் பார்த்ததை உங்களிடம் கூறுகின்றேன் என அவை ஆரம்பித்ததிலிருந்தே நடந்த சம்பவங்களை விவரித்து விட்டு, தொடர்ந்து பேசியதாவது :



“முதல்வர் பட்ஜெட்டை படித்தார். அந்த நேரத்தில் ஜெயலலிதாவின் கை முதல்வரின் கையிலிருந்த பட்ஜெட் மீது தாவியது. அப்போது அ.தி.மு.க. உறுப்பினர் புத்தகத்தை முதல்வரை நோக்கி வீச, அந்தப் புத்தகம் பட்டு முதல்வர் அணிந்திருந்த கண்ணாடி கீழே விழுந்து நொறுங்கியது.

பின்னர் அ.தி.மு.க.வினர் மைக்குகளைப் பிடுங்கி வீச, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அடிபட்டு இரத்தம் சொட்ட காணப்பட்டார். ஜெயலலிதா தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றி அவரது எம்.எல்.ஏ.க்கள் பாதுகாப்பாக நின்றனர். 10 நிமிடம் என்ன நடந்தது என்றே தெரியவில்லை. பின் ஜெயலலிதாவை அவரது எம்.எல்.ஏ.க்கள் அழைத்துச் சென்றனர்.

ஆனால், ஜெயலலிதா வெளியே சென்று, “அமைச்சர் துரைமுருகன் சேலையைப் பிடித்து இழுத்தார்; மானபங்கப்படுத்தினார் என்றெல்லாம் கூறுவது அப்பட்டமான பொய். அனுதாபத்தைப் பெற வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட கீழ்த்தரமான செயலில் ஈடுபடுவதா?

நாங்கள் (கம்யூனிஸ்டு) பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள். அதுபோன்ற சம்பவம் நடந்து இருந்தால் பார்த்துக்கொண்டு இருப்போமா?

ஜெயலலிதா தான் ஒரு நடிகை என்பதை நிரூபித்துவிட்டார். தி.மு.க.வைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக கூறவில்லை. உண்மையைச் சொல்கிறேன்.

அமைச்சர் துரைமுருகன் அவரது சேலையை இழுக்கவும் இல்லை; அவரை மானபங்கப்படுத்தவும் இல்லை.

இவ்வாறு மயிலாடுதுறையில் மார்ச் 29–ந் தேதி மார்க்சிஸ்ட் உறுப்பினர் பாப்பாஉமாநாத், ஜனநாயக மாதர் சங்கக் கூட்டத்திலேயே பேசினார்.

இந்தத் தகவல்களெல்லாம் மொத்தமாக மறைக்கப்பட்டு இன்றளவும் துரைமுருகன் ஜெயலலிதாவின் புடவையை பிடித்து இழுத்தார் என்ற வடிகட்டிய பொய்தானே வலம் வந்து கொண்டிருக்கிறது.

> ஜெயலலிதா வெளியே சென்று, ”அமைச்சர் துரைமுருகன் சேலையைப் பிடித்து இழுத்தார்; மானபங்கப்படுத் தினார் என்றெல்லாம் கூறுவது அப்பட்டமான பொய். அனுதாபத்தைப் பெற வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட கீழ்த்தரமான செயலில் ஈடுபடுவதா? நாங்கள் (கம்யூனிஸ்டு) பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர்கள். அதுபோன்ற சம்பவம் நடந்து இருந்தால் பார்த்துக் கொண்டு இருப்போமா?

**உண்மைகளை மறைத்து கழகத்தை களங்கப்படுத்த எப்படி எல்லாம் ஒரு கூட்டம் செயல்பட்டு வருகிறது என்பதை விளக்கவே இந்த விவகாரங்களை மீண்டும் விரிவாகத் தர வேண்டியுள்ளது.**

– முரசொலி
சில நினைவலைகளிலிருந்து...